# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.49/2024

வாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரேமா | வா.சா.–1 | |
| த/பெ. | சுந்தரம் | | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 52 |

---

முதல் விசாரணை 04.06.2026.

நான் இந்த வழக்கின் வாதி. எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை என் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 29.08.2003ம் தேதிய 1ம்பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் SRO நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 22.02.2023ம் தேதிய 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் SRO நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 21.02.2009ம்தேதிய வாதிக்கு மதிவாணன் எழுதிக்கொடுத்த பணப்பற்று ரசீது அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. தாவா சொத்திற்கு நகராட்சி அளித்த வரைபட அனுமதி அசல்

**வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 27.11.2009 ம் தேதிய தாவா சொத்தில் வாதி போர் போட்டதற்கான ரசீது அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. தாவா சொத்திற்கு வாதி செலுத்திய சொத்து வரி ரசீதுகள் எண்ணம் 8 அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 31.10.2003 ம் தேதிய வாதிக்கு 1ம்பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஜெனரல் பவர் பத்திரம் அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S